<u>2026 ஜூன் மாதம் 25– ஆம் தேதி வியாழக்கிழமை</u>

<u>கூடுதல் மாவட்ட விரைவு நீதிமன்றம், தேனி</u>

<u>S.C. நெம்பர் : 32/2021</u>

2026–ஆம் ஆண்டு ஜூன் மாதம் 25– ஆம் தேதி வியாழக்கிழமை திருமதி.L.சுபத்ரா, கிரேடு I பெஞ்ச் கிளர்க் அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.

| | |
|---|---|
| பெயர்: | PW10 (LW8) – சங்கரபாலு |
| தகப்பனார் பெயர்: | முத்துராமலிங்கம் |
| ஊர்: | கடமலைக்குண்டு |
| வட்டம்: | ஆண்டிபட்டி |
| மாவட்டம்: | தேனி |
| தொழில்: | விவசாயம் |
| வயது : | 43 |

25.06.2026

(1, 2, 9 எதிரிகள் ஆஜர். 3 முதல் 8 வரையிலான எதிரிகள் ஆஜர் இல்லை. எதிரிகள் 5 முதல் 8 எதிரிகளின் அடையாளத்தை மறுக்கவில்லை என்று 5 முதல் 8 எதிரிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட 355 BNSS மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது, பிரிவு 355 BNSS –ன்படி மனுத்தாக்கல் செய்யப்பட்டு, மனு அனுமதிக்கப்பட்டது. எதிரிகளின் வழக்கறிஞரும் ஆஜர்).

(சாட்சி அழைக்கப்பட்டு சம்பந்தப்பட்ட போலீசாரால் அவரது ஆதார் அடையாள அட்டை மூலம் அடையாளம் காணப்பட்டு ஒப்பீடு செய்யப்பட்டு பின் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் அளிக்கிறார்)

**முதல் விசாரணை:–**

1. நான் தற்சமயம் தேனி மாவட்டம், ஆண்டிபட்டி வட்டம், கடமலைக்குண்டுவில் வசித்து வருகிறேன். நான் விவசாயம் செய்து வருகிறேன். வழக்கில் இறந்துபோன செல்லப்பாண்டியன் எனது மைத்துனர்

ஆவார். இவ்வழக்கின் எதிரிகளை எனக்கு தெரியும். சுமார் 6 ஆண்டுகளுக்கு முன்பு சுமார் 6 மாதங்களாக செல்லப்பாண்டியன் வீட்டிற்கு வரவில்லை. எனது மூத்த மைத்துனர் ராமராஜ் என்பவர் செல்லப்பாண்டியனின் மனைவி 9 வது எதிரி சித்ராவின் வீட்டிற்கு சென்று, செல்லப்பாண்டியன் வீட்டிற்கு ஏன் வரவில்லை என்று கேட்டதற்கு 9 வது எதிரி சித்ரா சரியான பதில் சொல்லவில்லை. பின்னர் ராமராஜ் கடமலைக்குண்டு காவல்நிலையம் சென்று புகார் கொடுத்தார்.

2. புகார் கொடுத்த மூன்று நாட்கள் கழித்து கடமலைக்குண்டு காவல் ஆய்வாளர் ராமராஜை காவல்நிலையத்திற்கு 29.02.2020 ம் தேதி அழைத்தார், அப்போது ராமராஜ் என்னையும் காவல்நிலையத்திற்கு அழைத்தார். காவல்நிலையத்திற்கு நானும், மைத்துனர் ராமராஜூம் சென்றோம், காவல் ஆய்வாளர் செல்லப்பாண்டியனை உச்சிபுளியில் வைத்து மகாராஜன் கூலிப்படையை வைத்து தலையை வெட்டி தீ வைத்து எரித்துவிட்டதாக மயிலாடும்பாறை கிராம நிர்வாக அலுவலர் சொன்னதாக எங்களிடம் சொன்னார். நாங்கள் முன்னே சொல்கிறோம், நீங்கள் உறவினர்களுடன் பின்னே வாருங்கள் என்று சொன்னார். கிராம நிர்வாக அலுவலரிடம் 1 வது எதிரி மகாராஜன் கூறியதாக காவல் ஆய்வாளர் எங்களிடம் சொன்னார்.

3. காலை சுமார் 8.30 மணியளவில் நான், எனது மனைவி ஈஸ்வரி, ராஜேந்திரன், கங்காதேவி, முருகன், செல்வி, ஜெயஸ்ரீ, கீர்த்தனா, செல்லப்பாண்டியனின் மூன்று மகன்கள் ஆகியோர்கள் கடமலைக்குண்டுவிலிருந்து வேனில் உச்சிபுளிக்கு சென்றோம். உச்சிபுளியிலிருந்து காவல் ஆய்வாளருக்கு அலைபேசியில் தொடர்பு கொண்டபோது, உச்சிபுளியில் கடற்கரை ஓரத்திலுள்ள பள்ளிவாசல் அருகில் வரச் சொன்னார். நாங்கள் அனைவரும் வேனில் பள்ளிவாசல் அருகில் சென்றோம், அங்கு காவல் ஆய்வாளர், 5 வது எதிரி செந்தில், 6 வது எதிரி அன்புகணேஷ், 7 வது எதிரி கிஷோர், 8 வது எதிரி நாகராஜ் ஆகியோர்களை

கைவிலங்கோடு இருந்தார்கள், மேலும் கிராம நிர்வாக அலுவலர், மருத்துவர், தடய அறிவியல் துறை நிபுணர்கள் இருந்தார்கள்.

4. ஆய்வாளர் 7 வது எதிரி கிஷோரை அழைத்து செல்லப்பாண்டியனை என்ன செய்தீர்கள் என்று கேட்டார், 7 வது எதிரி கிஷோர் நடந்ததை நடித்து காண்பித்தார், நாங்கள் அதை நேரடியாக பார்த்தோம். செல்லப்பாண்டியனை கடமலைக்குண்டுவிலிருந்து 3 வது எதிரி சக்திவேல் அழைத்து வந்து, உச்சிபுளியில் தலையை துண்டாக வெட்டி, உடல் மற்றும் தலைக்கு தீயை வைத்து எரித்து தலை முழுவதுமாக எரிந்துவிட்டது, உடலை மண்ணை போட்டு மூடிவிட்டதாக நடித்து காண்பித்தார். தலையில் சிறு சிறு எலும்புகள் மட்டும் இருந்தன.

5. ஜே.சி.பி வைத்து அங்கிருந்த அதிகாரிகள் தோண்டி எடுத்தார்கள். அந்த உடலில் தலை பகுதி இல்லை, அந்த உடலில் வலது பகுதி அழுகிய நிலையில் எலும்புடன் இருந்தன, இடது பகுதி தீக்காயத்துடன் வெந்து இருந்தது. அங்கிருந்த மருத்துவர் அங்கிருந்த எலும்பு மற்றும் சதையை எடுத்துக்கொண்டார்கள், நாங்கள் சம்பிரதாயப்படி சடங்கு செய்ய எலும்பு கேட்டோம், எங்களுக்கும் எடுத்துக்கொடுத்தார்கள், குலவழக்குப்படி சடங்கு செய்தோம். அதன்பின்பு நாங்கள் கிளம்பிவிட்டோம். காவல் ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**<u>1, 2, 9 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

6. புகார் கொடுத்த மூன்று நாட்களில் ராமராஜ் என்னை காவல்நிலையத்திற்கு அழைத்ததாக போலீசார் விசாரணையில் சொன்னேனா என்றால் சொன்னேன். போலீசார் விசாரணையில் தலையை வெட்டி எடுத்துவிட்டார்கள் என்று சொன்னேனா என்றால் சொன்னேன். போலீசார் 7 வது எதிரி கிஷோரிடம் தலை எங்கே என்று கேட்டார்களா என்றால் கேட்டார்கள், தலையை வெட்டி எரித்துவிட்டதாக கூறினார். 7 வது எதிரி

கிஷோர் நடித்துக்காட்டியதாக போலீசார் விசாரணையில் சொன்னேனா என்றால் சொன்னேன்.

7. நான், ஈஸ்வரி, ராஜேந்திரன், கங்காதேவி, முருகன், ஜெயஸ்ரீ, கீர்த்தனா ஆகியோர்கள் உச்சிபுளிக்கு சென்றோம் என்ற விபரத்தை போலீசார் விசாரணையில் சொன்னேனா என்றால் சொன்னேன். உடலில் வலது பகுதி அழுகிய நிலையில் இருந்தது என்ற விபரத்தை போலீசார் விசாரணையில் சொன்னேனா என்றால் சொன்னேன். உடலில் இடது பக்கம் தீக்காயத்துடன் இருந்தது என்ற விபரத்தை போலீசார் விசாரணையில் சொன்னேனா என்றால் சொன்னேன். வழக்கு சம்பந்தமாக போலீசார் எத்தனை நாட்கள் கழித்து என்னை விசாரித்தார்கள் என்றால் சுமார் ஒரு மாதம் கழித்து விசாரித்தார்கள். 5 முதல் 8 எதிரிகள் கைவிலங்கோடு இருந்தார்கள் என்ற விபரத்தை போலீசார் விசாரணையில் சொன்னேனா என்றால் சொன்னேன்.

8. மேற்படி 5 முதல் 8 எதிரிகளை சம்பவத்திற்கு முன்னர் நான் பார்த்ததில்லை என்றால் சரிதான். பிணத்தை பார்த்தப்பின்பு 5 முதல் 8 எதிரிகளை நான் பார்த்ததில்லை என்றால் சரிதான். 5 முதுல் 8 எதிரிகளின் அங்க அடையாளங்கள் குறித்து போலீசார் விசாரணையில் சொன்னேனா என்றால் சொல்லவில்லை. மருத்துவர் எலும்பு மற்றும் சதையை எடுத்துக்கொண்டார்கள் என்ற விபரத்தை போலீசார் விசாரணையில் சொன்னேனா என்றால் சொன்னேன். நாங்கள் சென்ற வேனின் பதிவு எண் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. வேனை ஓட்டிவந்த ஓட்டுநர் பெயர் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது.

9. வேன் கடமலைக்குண்டுவில் இருந்த வேன் என்றால் சரிதான், எனது மைத்துனர் ராமராஜ் வேனை எடுத்து வந்தார். எனக்கு சொந்த நிலங்கள் கிடையாது என்றால் சரிதான். நான் தேனியில் உள்ள ஒரு கடையில் வேலை செய்து வருகிறேன் என்றால் இல்லை. சாட்சி தானாக முன்வந்து அவர்

பால்மாடுகள் வைத்து, பால் வியாபாரம் செய்து வருகிறேன் என்று கூறினார். எனக்கு எழுதப்படிக்க தெரியுமா என்றால் தமிழ் எழுதப்படிக்க தெரியும். ஒருமாதம் கழித்து காவல்நிலையத்தில் என்னை விசாரித்தப்போது காவல்நிலையத்தில் கையொப்பம் வாங்கினார்கள் என்றால் இல்லை. என்னை விசாரித்தப்போது வேறு யாரை விசாரித்தார்கள் என்றால் ராஜேந்திரன் மற்றும் ராமராஜை விசாரித்தார்கள்.

10. ராமராஜின் வாக்குமூலத்தை காவல் ஆய்வாளர் எழுதிக்கொண்டாரா என்றால் எழுதிக்கொண்டார். போலீசார் சொல்லிக்கொடுத்து எதிரிகளை அடையாளம் காட்டுகிறேன் என்றால் சரியல்ல. எதிரிகளின் பெயர் எனக்கு தெரியாது என்றால் சரியல்ல, தெரியும். நான் சென்று பார்த்த பிரேதம் செல்லப்பாண்டியனின் பிரேதம் இல்லை என்றால் மருத்துவர் பிரேதத்திலிருந்து பாகங்களை எடுத்து டி.என்.ஏ பரிசோதனை செய்து பார்த்துவிட்டு, அந்த பிரேதம் செல்லப்பாண்டியன் பிரேதம் என்பதை உறுதி செய்துள்ளார்கள். டி.என்.ஏ பரிசோதனை அப்போதே செய்தார்களா என்றால் ஒருமாதம் கழித்து தெரிந்து கொண்டேன். நான் உச்சிபுளிக்கு செல்லவில்லை என்றாலும், நான் சொல்வதுபோல் சம்பவம் எதுவும் நடக்கவில்லை என்றால் சரியல்ல, நான் சென்றேன்.

<u>3 வது எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>

11. உச்சிபுளியில் பார்த்த விபரங்களை தவிர மற்ற விபரங்கள் காவல் ஆய்வாளர் ராமராஜிற்கு சொல்லி, ராமராஜ் எனக்கு சொல்லி தெரியும் என்றால் சரிதான். எனக்கு தலையை எரித்த இடத்தை அடையாளம் காண்பித்தார்களா என்றால் காண்பித்தார்கள், தலையை துண்டாக வெட்டி குழிக்குள் போட்டு எரித்ததாக 7 வது எதிரி கிஷோர் கூறினார். பிணத்தை எரித்த விபரத்தை காவல்துறையினர் புதிதாக எனக்கு சொல்லிக்கொடுத்து நான் சொல்கிறேன் என்றால் சரியல்ல. உச்சிபுளியில் நாங்கள் பார்த்த விபரங்களை போலீசார்

புகைப்படம் மற்றும் வீடியோ எடுத்தார்களா என்றால் எடுத்தார்கள். காவல்துறையினர் வழக்கிற்கேற்றவாறு சாட்சியம் அளிக்க எனக்கு சொல்லிக்கொடுத்து அதன் அடிப்படையில் நான் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. ஒரே குடும்பத்தை சேர்ந்த எல்லோரும் சேர்ந்து எதிரிகளுக்கு எதிராக சாட்சியம் அளிக்கிறோம் என்றால் சரியல்ல.

**5 முதல் 8 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

12. எதிரிகள் பெயர், விபரம் யார் சொல்லி எனக்கு தெரியும் என்றால் கடமலைக்குண்டு காவல் ஆய்வாளர் சொல்லி எனக்கு தெரியும். உச்சிபுளிக்கு 7 வது கிஷோர் வரவில்லை என்றாலும், அவர் தலையை வெட்டியதாக சொல்லவில்லை என்றாலும், தலையையும், உடலையையும் எரித்ததாக சொல்லவில்லை என்றாலும் சரியல்ல. அவர் நடித்துக்காண்பித்தார் என்று வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. இறந்துபோனவர் எனது உறவினர் என்பதால் ராமராஜ் மற்றும் காவல்ஆய்வாளர் கேட்டுக்கொண்டதற்கிணங்க நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**4 வது எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

13. 1 முதல் 3, 5 முதல் 9 எதிரிகள் தரப்பில் செய்யப்பட்ட குறுக்கு விசாரணையை அப்படியே ஏற்றுக்கொள்கிறார்.

**மறு விசாரணை** :– இல்லை

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னால் இன்று 25.06.2026 அன்று வியாழக்கிழமை சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.

G SREE DEVI

Digitally signed by G SREE DEVI
Date: 2026.06.25 18:01:17 +0530

கூடுதல் மாவட்ட நீதிபதி, தேனி.
25.06.2026